பாரா ஆசிய விளையாட்டுப் போட்டி: பதக்கம் வென்ற இருவருக்கு தலா ரூ.30 லட்சம்

முதல்வர் அறிவிப்பு

சென்னை, அக். 20: ஜப்பானில் நடைபெற்றுவரும் பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் டேபிள் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் கிளாஸ் 1 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழக வீரர் ஜெஹான் டொரப் மதன், பெண்கள் கிளாஸ் 9 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை பேபி சஹானா ரவி ஆகியோருக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும், அவர்கள் இருவருக்கும் தலா ரூ.30 லட்சம் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

வீராங்கனை பேபி சஹானா ரவி கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பால் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார் என்றும், அவரது வெற்றி தமிழ்நாட்டின் இளம் பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குப் புதிய உத்வேகத்தை அளிக்கும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

பதக்கம் வென்ற இருவருக்கும் தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் பறிமுதல் விவகாரம்: முதல்வர் மௌனம் காப்பது ஏன்?

எடப்பாடி பழனிசாமி கேள்வி



சென்னை, அக். 20: தவெக நிர்வாகியிடம் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம் குறித்து முதல்வர் மௌனம் காப்பது ஏன்? என அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு:

நாகப்பட்டினம் தவெக நிர்வாகி பூபாலன் கைது குறித்து மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இது தமிழகத்துக்கு எவ்வளவு பெரிய தலைகுனிவு என்று முதல்வர் விஜய்க்கு தெரியுமா? இதற்குப் பின் மிகப் பெரிய போதைப் பொருள் கும்பல் இயங்குவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பில் இருக்கும் முதல்வர் எப்போதும்போல் மௌனம் காப்பது ஏன்?

கடந்த திமுக ஆட்சியில் ஜாபர் சாதிக் வழக்கில் போதைப் பொருளுக்கான மூலப்பொருள் சிக்கியதே மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால், தற்போது தவெக நிர்வாகியிடமிருந்து ரூ. 400 கோடி மதிப்புள்ள 137 கிலோ முழுமையான போதைப் பொருள் சிக்கியிருப்பதை எப்படி எடுத்துக் கொள்வது?

இவ்வளவு பெரிய சர்வதேச போதைக் கடத்தல் நடந்திருக்கும்போது, யாருக்காக போதை எதிர்ப்பு மாரத்தான் ஓடிக்கொண்டு இருந்தார் முதல்வர்? இதுகுறித்து செய்தி வெளியிடும் ஊடகங்களை தவெகவினர் மிரட்டுகின்றனர். அப்படியென்றால், இந்தப் போதைப் பொருள் கடத்தல் ஆளுங்கட்சி தலைமைக்குத் தெரிந்து, அவர்கள் துணையோடு தான் நடக்கிறது என எடுத்துக் கொள்ளலாமா? மேலும், இந்தப் போதைப் பொருள் கடத்தலைக்கூட தமிழக காவல் துறை பிடிக்கவில்லை. மத்திய அரசின் வருவாய் புலனாய்வு இயக்குநரகம் தான் பிடித்திருக்கிறது. இதற்கே தமிழக அரசு தலைகுனிய வேண்டும்.

மாற்றம் என்று சொல்லி ஆட்சியில் அமர்ந்திருக்கும் முதல்வரிடருந்து இதுகுறித்து ஒரு விளக்கமாவது வருமா? என கேள்வி எழுப்பியுள்ளார் எடப்பாடி பழனிசாமி.

போதைப் பொருள் பதுக்கிய சம்பவம்: மேலும் ஒருவருக்கு அழைப்பாணை

நாகப்பட்டினம், அக். 20: நாகை அருகே போதைப் பொருளை பதுக்கிய சம்பவம் தொடர்பாக, மேலும் ஒருவர் வீட்டில் சோதனை நடத்திய மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள், அவரை நேரில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்துள்ளனர்.

நாகையிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கிவைத்திருந்த 135 கிலோ மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளை கடந்த அக்.16-ஆம் தேதி மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தவெக நிர்வாகி திருப்பூண்டி, கீழபிடாகையைச் சேர்ந்த பூபாலன் (42), பிரதாபராமபுரத்தைச் சேர்ந்த சுகன் (27), மணிகண்டன் (39), சதீஷ்குமார் (30) ஆகிய நால்வர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டவர்களுடன் இணைந்து வேளாங்கண்ணியில் தனியார் விடுதியை குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் பிரதாபராமபுரம், வடக்கு தெருவைச் சேர்ந்த ராஜ்குமார் (38) என்பவர் வீட்டில் வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் திங்கள்கிழமை இரவு 2 மணி நேரம் சோதனை நடத்தினர். மேலும், வீட்டிலிருந்த ராஜ்குமாரின் மனைவியிடம் விசாரணை மேற்கொண்டனர்.

சோதனையின்போது வீட்டில் இல்லாத ராஜ்குமாரை வரும் 23-ஆம் தேதி திருச்சியில் உள்ள டிஆர்ஐ அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக அறிவுறுத்தி அழைப்பாணை பிறப்பித்துள்ளனர்.

பெண் காவலர் உள்பட இருவர் பணியிட மாற்றம்: போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பில் இருந்ததாக கூறப்படும், வேளாங்கண்ணி டிஎஸ்பியின் கார் ஓட்டுநர் சிவா, வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த பெண் காவலர் சங்கீதா ஆகியோர் தஞ்சாவூருக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தாராபுரத்துக்கு ரூ.1,439 கோடியில் புதிய காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்

மதுராந்தகத்துக்கும் புதிய திட்டங்கள் அறிவிப்பு

சென்னை, அக். 20: இடைத்தேர்தலில் தவெக வெற்றி பெற்ற தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளுக்கு ரூ.1,550 கோடியில் வளர்ச்சித் திட்டங்களை முதல்வர் ஜோசப் விஜய் அறிவித்தார். இதில் தாராபுரத்துக்கு ரூ.1,439 கோடியில் புதிய காவிரி கூட்டுக் குடிநீர் திட்டமும் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் விஜய் வெளியிட்ட அறிவிப்புகள்: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 2,455 ஊரக குடியிருப்புகளில், 1,223 ஊரக குடியிருப்புகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள தாராபுரம், காங்கயம், குண்டடம், பொங்கலூர், வெள்ளக்கோயில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மூலனூரின் 7 ஊராட்சிகள், பல்லடத்தின் 17 ஊராட்சிகளைச் சார்ந்த மொத்தம் 1,232 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றுநீரை ஆதாரமாகக் கொண்ட புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 1,439 கோடியில் செயல்படுத்தப்படும்.

தாராபுரம் தொகுதிக்குள்பட்ட பகுதிகளில் வீடு இல்லாதவர்களுக்கு 2,700 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும். தாராபுரம் வட்டம், சின்னபுத்தூர் கிராமம், மஜரா குருவப்ப நாயக்கன் பாளையத்தில் 20 ஆண்டுகளாக வீடுகட்டி குடியிருந்து வரும் சுமார் 87 குடும்பங்களுக்கு பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தாராபுரம், மூலனூர், குண்டடம் வட்டாரங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து, சுமார் 13,000 குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும். தாராபுரம் வட்டம் மூலனூரில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும். இந்த அறிவிப்புகளை விரைவாக நிறைவேற்ற துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



மதுராந்தகம்: மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அத்திமனம் கிராமத்தில் புக்கத்துறை மடுவின் குறுக்கே ஒரு தடுப்பணை ரூ.5 கோடியில் அமைக்கப்படும். செம்பூண்டி ஊராட்சியில் உள்ள பொதுப்பணித் துறை ஏரியின் மதகுகள் ரூ. 4.50 கோடியில் சீரமைக்கப்படும். நெல்வாய் ஊராட்சியிலுள்ள மடுவைத் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தும் பணி ரூ.1.30 கோடியில் மேற்கொள்ளப்படும்.

தின்னலூர் ஊராட்சியில் ஒரு புதிய சமுதாய நலக்கூடக் கட்டடம் ரூ.70 லட்சத்தில் கட்டப்படும்.

மதுராந்தகம் தொகுதியில் தலா ரூ. 30 லட்சத்தில் 6 நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ1.80 கோடியில் அமைக்கப்படும். கொள்முதல் செய்யப்படும் நெல்லைப் பாதுகாக்கும் வகையில் ஆத்தூரில் ரூ.20 கோடியில் 20,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பாதி அளவு மறைக்கப்பட்ட கிடங்கு அமைக்கப்படும். ரூ.10 கோடியில் 25 ஏக்கர் பரப்பளவில் மாநில விதைப் பண்ணை அமைக்கப்படும். அச்சரப்பாக்கத்தில் ரூ.20 கோடியில் புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படும்.

பாலாற்றின் குறுக்கே படாளம் மற்றும் உதயம்பாக்கம் இடையே ஒரு புதிய உயர்நிலை தடுப்பணை கட்ட சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் உள்ளிட்ட 11 வளர்ச்சித் திட்ட அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டுள்ளார்.

தாராபுரம் நாதக வேட்பாளர் கார்த்திகா கணவருடன் கைது

கோவை, அக். 20: திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிட்ட கார்த்திகா, அவரது கணவர் உள்ளிட்ட 10 பேர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

நாம் தமிழர் கட்சியின் மகளிர் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளரான கார்த்திகா, அண்மையில் நடைபெற்ற தாராபுரம் பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கினார். இடைத்தேர்தல் பரப்புரையின் இறுதிக்கட்டத்தின்போது, தாராபுரத்தை அடுத்த வீராச்சிமங்கலம் பிரிவு பகுதியில் நாம் தமிழர் கட்சியினர் பரப்புரை மேற்கொள்ள முற்பட்டனர். அப்போது, அந்தப் பகுதியில் முதல்வர் விஜய் வாகனம் மூலம் 'ரோடு ஷோ' மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்ததால், அங்கு மாற்றுக் கட்சியினர் பரப்புரை செய்ய அனுமதியில்லை என காவல் துறையினர் தெரிவித்தனர்.



கைது செய்யப்பட்டு தாராபுரம் காவல் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்ட கார்த்திகா.

இதனால், கார்த்திகா மற்றும் நாம் தமிழர் கட்சியினர் காவல் துறையினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். மேலும், தாராபுரம் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு முழக்கங்களை எழுப்பினர்.

இதையடுத்து முதல்வர் ஜோசப் விஜய் பயணித்த சாலையில் மறியலில் ஈடுபட்டது, சட்டம்-ஒழுங்குக்கு குந்தகம் விளைவித்தது மற்றும் காவல் நிலையத்தை முற்றுகையிட்டது உள்ளிட்ட 4 வழக்குகளில் 12-க்கும் மேற்பட்ட பிரிவுகளின் கீழ் கார்த்திகா உள்ளிட்டோர் மீது தாராபுரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

தேர்தல் வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்த நிலையில், கோவை விளாங்குறிச்சியில் உள்ள கார்த்திகா இல்லத்துக்கு செவ்வாய்க்கிழமை காலை சென்ற தாராபுரம் காவல் துறையினர், கார்த்திகா மற்றும் அவரது கணவர் முருக சந்திரகுமார் ஆகியோரை கைது செய்தனர். பின்னர், இருவரும் போலீஸ் பாதுகாப்புடன் தாராபுரம் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேபோல, நாம் தமிழர் கட்சியின் மாநில கொள்கை பரப்புச் செயலரான தென்காசியைச் சேர்ந்த இசை மதிவாணன், தாராபுரம் தேர்தல் பொறுப்பாளர் சஞ்சய் காந்தி, மூலனூர் பகுதி பொறுப்பாளர் கந்தசாமி, தாராபுரம் நகர பொறுப்பாளர் ஷேக் பரீத், தாராபுரம் மாணவர் பாசறை செயலர் சூர்யா, சென்னை பகுதி செயலர் கோகுல், இளைஞர் பாசறை செயலர் விக்னேஷ், நிர்வாகி கோவிந்தராஜ் ஆகிய 8 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட 10 பேரும் தாராபுரம், குண்டடம் உள்ளிட்ட காவல் நிலையங்களில் வைத்து விசாரிக்கப்பட்டனர். பின்னர், இவர்கள் தாராபுரம் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த கைது நடவடிக்கையைக் கண்டித்து நாம் தமிழர் கட்சியினர் தாராபுரம் காவல் நிலையம் முன் திரண்டதால், அங்கு ஏராளமான போலீஸார் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டனர்.

தலைவர்கள் கண்டனம்

சென்னை, அக். 20: நாம் தமிழர் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட கார்த்திகா கைது செய்யப்பட்டதற்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மு.க.ஸ்டாலின்: இடைத்தேர்தலில் தவெக அரசு அதிகார துஷ்பிரயோகத்தை தட்டிக் கேட்டதற்காக கார்த்திகாவை கைது செய்து அலைக்கழிப்பது கொடுங்கோன்மையும் குறுகிய மனப்பான்மையும் ஆகும்.

நாட்டையே உலுக்கியுள்ள கொடிய போதை மருந்து கடத்தல் வழக்கில் தவெக நிர்வாகியும் அவரது கூட்டாளிகளும் கைது செய்யப்பட்ட சம்பவத்தைத் திசைதிருப்பவும் தனது நிர்வாகத் தோல்விகளை மறைக்கவும் இத்தகைய கைது நடவடிக்கையில் தவெக அரசு ஈடுபடுகிறது. கார்த்திகாவையும், அவரது கட்சியினரையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்ய வேண்டும்.

சீமான்: கார்த்திகா, அவரது கணவர் முருகசந்திரகுமார் உள்ளிட்ட நாம் தமிழர் கட்சியினரை பொய் வழக்கில் அரசியல் பழிவாங்கும் நோக்கோடு கைது செய்திருக்கும் தவெக அரசின் செயலை மிகக் கடுமையாகக் கண்டிக்கிறேன். தேர்தல் கால வழக்குக்கு கைது நடவடிக்கை மேற்கொண்டு சிறைப்படுத்துவது பாசிசத்தின் உச்சம்.

நாகையில் பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருளைக் கடத்த முயன்ற சொந்த கட்சி நிர்வாகி உள்பட குற்றச் செயல்களில் ஈடுபட்ட தவெகவினர் மீது பாயாத கைது நடவடிக்கை, அறவழியில் போராடிய கார்த்திகா உள்ளிட்ட 7 பேர் மீது பாயுமென்றால், நடப்பது மக்களுக்கான ஆட்சியா? கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் சீமான்.

நாம் தமிழர் கட்சி நிர்வாகி கார்த்திகா கைது செய்யப்பட்டதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தேமுதிக பொதுச்செயலர் பிரேமலதா விஜயகாந்த், அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் உள்ளிட்டோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் குறித்து அவதூறு பேச்சு: திமுக கவுன்சிலர் மீது வழக்குப் பதிவு

சென்னை, அக். 20: முதல்வர் குறித்து அவதூறாகப் பேசியதாக திமுக கவுன்சிலர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் கடந்த 7-ஆம் தேதி மாலை சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் முப்பெரும் விழா நடைபெற்றது. துறைமுக பகுதி செயலாளர் முரளி ஏற்பாடு செய்த இந்த விழாவில், திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பேசிய சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளரும், வில்லிவாக்கம் பகுதி 95-ஆவது வார்டு கவுன்சிலருமான சுதா தீனதயாளன், முதல்வர் விஜய் குறித்து தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசினார்.

இந்தப் பேச்சுக்கு தவெகவினர் மட்டும் அல்லாமல் பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனங்கள் எழுந்தன. இந்தக் கூட்டத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா உள்பட ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர்.

இதுதொடர்பாக தவெக துறைமுக பகுதி செயலாளர் உதயகுமார், எஸ்பிளனேடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதில், முதல்வர் குறித்து தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசிய சுதா தீனதயாளன் மற்றும் விழாவை ஏற்பாடு செய்த முரளி ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அதன்பேரில், சுதா தீனதயாளன், முரளி ஆகிய இருவர் மீதும் எஸ்பிளனேடு போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

மழைக்கு இரு வீடுகள் இடிந்து சேதம்

மேட்டுப்பாளையம், அக். 20: கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தை அடுத்த காரமடை அருகே உள்ள கிட்டாம்பாளையம் பகுதியில் கனமழையால் 2 வீடுகள் இடிந்து சேதமடைந்தன. இந்த வீடுகளில் ஆள்கள் இல்லாததால் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், காரமடை, சிறுமுகை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த 3 நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் காரமடை நகராட்சிக்கு உள்பட்ட கிட்டாம்பாளையம் பகுதியில் ராமசாமி என்பவருக்குச் சொந்தமான வீடு திங்கள்கிழமை இரவு பெய்த கனமழையால் இடிந்து விழுந்தது.


இதேபோல அதே பகுதியில் மற்றொரு ராமசாமி என்பவருக்குச் சொந்தமான வீட்டின் மேற்கூரையும் இடிந்து விழுந்து சேதமடைந்தது. இந்தச் சம்பவங்கள் நடைபெற்றபோது 2 வீடுகளிலும் யாரும் இல்லாததால் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

காவிரி பிரச்னைக்கு விரைந்து நடவடிக்கை: நயினார் நாகேந்திரன் வலியுறுத்தல்

சென்னை, அக். 20: காவிரி பிரச்னையைத் தாமதப்படுத்தாமல், புறக்கணிக்காமல் தவெக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

காவிரி நதிநீர் பகிர்தல் பிரச்னை என்பது ஒரு தொடர்கதையாக இருக்கிறது. இந்தப் பிரச்னை விவசாயிகளை வாட்டி வதைத்து வருகிறது. காவிரி நதிநீர் அதிகமாக பயணமாகும் தமிழக டெல்டா பகுதிகளுக்குரிய, உரிமையான 4 டிஎம்சி நீரை காவிரி மேலாண்மை உத்தரவுப்படி வழங்காமல் கர்நாடக அரசு தாமதப்படுத்தி வருகிறது. இது கண்டனத்துக்குரியது. எனவே, தவெக அரசு காவிரி பிரச்னையை தாமதப்படுத்தாமல், புறக்கணிக்காமல் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



மேலும், டெல்டா விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, சம்பா சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில், டெல்டா விவசாயிகளுக்கென தனி போர்க்கால கட்டுப்பாட்டு மையத்தை அமைக்க வேண்டும். மேட்டூர் அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்திறப்பு விவரங்கள், பாசன நீர் விநியோகம், மழை மற்றும் வானிலை முன்னறிவிப்புகள், ஆகியவை விவசாயிகளுக்கு இந்த கட்டுப்பாட்டு மையம் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவசாயிகளைப் போல, விவசாயக் கடன் செலுத்த முடியாத விவசாயிகளுக்கும் உடனடி பயிர்க் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் நயினார் நாகேந்திரன்.


தங்கம் பவுனுக்கு ரூ.640 குறைவு

சென்னை, அக். 20: ஆபரணத் தங்கத்தின் விலை செவ்வாய்க்கிழமை பவுனுக்கு ரூ.640 குறைந்து, ரூ.1,07,920-க்கு விற்பனையானது.

தங்கம் விலை ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்ட நிலையில் திங்கள்கிழமை பவுனுக்கு ரூ.280 உயர்ந்து, ரூ.1,08,560-க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை (அக்.20) ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.80 குறைந்து, ரூ.13,490-க்கும், பவுனுக்கு ரூ.640 குறைந்து, ரூ.1,07,920-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.240-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2.40 லட்சத்துக்கும் விற்பனையானது.

நடிகர் கார்த்திக் சபேஷ் காலமானார்



சென்னை, அக். 20: மறைந்த இசையமைப்பாளர் தேவாவின் சகோதரர் சபேஷின் மகனும், நடிகருமான கார்த்திக் சபேஷ் (37), உடல்நலக் குறைவால் சென்னையில் திங்கள்கிழமை (அக்.19) காலமானார்.

நடிகர் கார்த்திக் சபேஷ், தமிழில் வல்லவன், பட்டத்து யானை, குளிர் 100 உள்ளிட்ட படங்களில் நடித்தவர். உடல்நல பிரச்னையால் இரு மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இரு வாரங்களாக இவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்ததால் தீவிர சிகிச்சை பிரிவில் கண்காணிக்கப்பட்டு வந்தார். இந்த நிலையில் திங்கள்கிழமை நள்ளிரவில் கார்த்திக் சபேஷ் காலமானார்.

கார்த்திக் சபேஷின் தந்தை சபேஷும், பிரபல இசையமைப்பாளராவார். தனது சகோதரரான முரளியுடன் இணைந்து பல படங்களுக்கு இசையமைத்துள்ளார். இவரது அண்ணன் இசையமைப்பாளர் தேவாவின் படங்களிலும் பணியாற்றி உள்ளார். சபேஷ், கடந்த ஆண்டு அக்.23-இல் காலமானார்.

கார்த்திக் சபேஷின் இறுதிச்சடங்கு செவ்வாய்க்கிழமை மாலை வளசரவாக்கம் மயானத்தில் நடைபெற்றது.

கடந்த அக்.17-ஆம் தேதி இவர்களது குடும்பத்தின் மூத்த உறுப்பினரான இசையமைப்பாளர் தேவா காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

யூனியன் பேங்க் Union Bank of India
குன்றத்தூர் கிளை
புதிய எண்.66, பழைய எண்.25, மனை எண்.78, பெரிய தெரு, குன்றத்தூர், சென்னை, தமிழ்நாடு-600069.

[விதி - 8(1)] சுவாதீன அறிவிப்பு

யூனியன் பேங்க் ஆப் இந்தியா, குன்றத்தூர் கிளை, புதிய எண்.66, பழைய எண்.25, மனை எண்.78, பெரிய தெரு, குன்றத்தூர், சென்னை, தமிழ்நாடு - 600069-யின் அதிகாரபூர்வ அதிகாரி கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் அதன் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான (இரண்டாம்) உரிமை அமலாக்க விதி (Act No. 54 of 2002) 13(12)-ன் பிரிவு 3-ன்கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரரின் சட்ட வாரிசுகளான **1. திரு. சீனிவாசன் A த/பெ. சத்யநாராயணன், 2. மறைந்த திருமதி. தேவசேனா சத்யநாராயணன் சொத்து பிரதிநிதித்துவப்படுவது: 2.a - திரு. சீனிவாசன் S த/பெ. சத்யநாராயணன், 2.b - Ms. B. புவனேஸ்வரி** ஆகியோருக்கு **03.08.2026** தேதியில் கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் **ரூ.2,40,40,719.81 (ரூபாய் இரண்டு கோடியே நாற்பது இலட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்றி பத்தொன்பது மற்றும் பைசா எண்பத்தி ஒன்று மட்டும்)** பாக்கித் தொகையை கடனுக்கான வட்டி சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.
மேற்படி பாக்கித்தொகையை கடன்தாரர் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **17.10.2026** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.
கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது யூனியன் பேங்க் ஆப் இந்தியா-க்கு, செலுத்தப்பட வேண்டிய **ரூ.2,40,40,719.81** பாக்கித் தொகை மற்றும் வட்டி சேர்த்து செலுத்துவதற்கு உட்பட்டதாகும்.
கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13-ன் துணைப்பிரிவு (8)-ன் ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம் :
சென்னை 600017, தி.நகர், சிவசைலம் தெரு, கதவு எண் 2 என்ற முகவரியில் அமைந்துள்ள, மொத்தம் நிலம் 2 கிரவுண்ட் மற்றும் 765 சதுர அடி (5565 சதுர அடி) நிலப்பரப்பில், 834.50 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு கொண்ட காலி வீட்டு சைட், மற்றும் அதன் மீது அமைந்துள்ள "டூப்லெக்ஸ்" வகை வீடு எண் 1, இதில் தரைத்தளம் மற்றும் முதல் தளம் அடங்கும். பொதுப் பகுதிகள் உட்பட மொத்தம் 1900 சதுர அடி கட்டுமானப் பரப்பைக் கொண்ட இந்த வீட்டின் பின்புறத்தில் இரண்டு கார்களை நிறுத்துவதற்கான இடவசதியும் உள்ளது. இந்தச் சொத்து, பழைய டி.எஸ். எண். 4731/1 தற்போதைய டி.எஸ். எண் 4731/15, பட்டா எண்: C.A No.785/2009, நாள்: 19.06.2009. பிளாக் எண்.107, தி.நகர் கிராமம், கிண்டி தாலுகா, சென்னை 600017-ல் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கில் : திருமதி விசாலாட்சி மற்றும் பிறருக்குச் சொந்தமான நிலம் (டி.எஸ். எண் 4731/16); தெற்கில்: சொலைப்பன் நாயுடு என்பவருக்குச் சொந்தமான சொத்து (டி.எஸ். எண் 8113/9 மற்றும் 8113/2); கிழக்கில்: மாநகராட்சிப் பள்ளி விளையாட்டு மைதானம் (டி.எஸ். எண் 4734); மேற்கில்: சிவசைலம் தெரு (டி.எஸ். எண் 4731/5). இந்தச் சொத்து, சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட தி.நகர் பதிவு சார்-மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. சொத்து வரி அசெஸ்மெண்ட் பில் எண். 09-113-11526-000.

தேதி : 17.10.2026
இடம் : குன்றத்தூர்
அதிகாரபூர்வ அதிகாரி
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

பொது அறிவிப்பு

எனது கட்சிகாரர் M/s. Superb land space project Pvt. Ltd., அவர்கள், M/s. Om Sambhavnath Infrastructures LLP., என்ற நிறுவனத்தையும் மற்றும் அதன் சொத்தான செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் தாலுக்கா, அம்மணம்பாக்கம் பெருக்கிராமத்திற்கு உட்பட்ட ஒத்திவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள பழைய ச.எண். 113/1, புதிய ச.எண், 113/1A ஏக்கர் 18.29 சென்ட் பரப்பளவு கொண்ட நிலத்தையும் அதன் பங்குதாரர்களிடம் இருந்து வாங்க உத்தேசித்துள்ளார் என்பதை பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கூறிய விற்பனைப் பரிவர்த்தனைக்கு யாருக்கேனும் ஆட்சேபனை, கோரிக்கை, பாத்தியதை, பிரச்சினை ஏதேனும் இருந்தால். அவர்கள் இந்தப் பிரசுரத்தின் நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் (14) அவர்களுடைய ஆட்சேபனைகள், உரிமை கோரல்கள், பாத்தியதை குறித்த விவரங்களை உறுதிப்படுத்தும் ஆவண ஆதாரத்துடன் கீழே குறிப்பிட்டுள்ளவரை தொடர்புகொள்ளலாம். தவறினால், மேற்குறிப்பிட்ட சொத்தைப் பொறுத்தமட்டில் மூன்றாம் தரப்பு உரிமை கோரல்கள், ஆட்சேபனைகள், சச்சரவுகள் ஏதுமில்லை என கருதப்படும், அதன்பிறகு உரிமைகோரல்கள், ஆட்சேபனைகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்கொண்டு எனது கட்சிகாரர் மேற்கண்ட உரிமையாளருடன் விற்பனை பரிவர்த்தனையை முடிக்கத் தொடங்குவார்.

M/s. கோ.ஸ்ரீவெங்கடேஷ், வழக்கறிஞர்கள்
எண். 176, புதிய கூடுதல் சட்ட அறைகள்,
சென்னை உயர்நீதிமன்றம், சென்னை 600 104.
தொடர்புக்கு: 9952991758.

வரி விளம்பரம்

PUBLIC NOTICE
CHANGE OF NAME

CHANGE OF NAME
My daughter, **Poojitha**, born on 1st November 2013 (District of Birth: Theni), residing at Site No. 2, Sivalingapuram, Coimbatore - 641 016, shall henceforth be known as **SHAHANA A B**
P ARUN KUMAR (Father)

equitas SMALL FINANCE BANK
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,
அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A மின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) – அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பின்னயநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே"** மற்றும் **"என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு/திருமதி ஜெய்சங்கர் K திரு/திருமதி பிரதாப் K திரு/திருமதி வள்ளியம்மாள் K அனைவரும் வசிக்கும் இடம்: 244, பஜனை கோவில் தெரு நாசரத்பேட்டை, மேப்பூர், நாசரத்பேட்டை S.O-சென்னை மண்டலம், தமிழ்நாடு - 600123	திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், மேப்பூர் கிராமத்தில், பழைய கிராம நத்தம் சர்வே எண்.146/1 மற்றும் சர்வே எண்.367/6, பட்டா எண்.106-ன்படி புதிய சர்வே எண்.367/6A-ல் அமைந்துள்ள 1,248 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும்.	ரூ.19,88,000/- ரூ.1,98,800/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண்.: 700010780546 15.05.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.9,99,693/- மேலும் 16.05.2026 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.10,81,289/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, பிரபாகரன் M 9003214639, கார்த்திக் குமார் A 8939729580
விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 25.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.
மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!